சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 39/2019

**PW 1 மணிவாசகம்** **19.09.2025**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தானது பழனி பாத யாத்திரை செல்லும் போது ஏற்பட்டது என்றால் சரிதான். நான் பாத யாத்திரையின் போது ஒளிரும் பட்டை எதுவும் எனது உடையில் அணிந்திருக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு நான் ஒளிரும் பட்டை அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பாத யாத்திரையின் போது ரோட்டின் நடுவே கவனக்குறைவாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, நான் ரோட்டின் ஓரமாக சென்றேன். எனக்கு நிரந்த ஊனம் ஏற்பட்டதை பொருத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல, கொடுங்காயம் ஏற்பட்டது. நான் எவ்வித அடிப்படையும் இல்லாமல் இழப்பீடு கோரியுள்ளேன் என்றும், அதனால் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி